திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, இந்த ஆடுதுறை விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்காக தேசிய வேளாண்மை ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் கொடுக்கும் 60 லட்சம் ரூபாயைக் கண்காணிக்கின்ற பொறுப்பு பல்கலைக் கழகத்திற்கா அல்லது அரசாங்கத்திற்கா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பல்கலைக் கழகம் கவனிக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி : ஆடுதுறை விவசாய ஆராய்ச்சி நிலையத்திலே உள்ள தொழிலாளர்களுக்கு ஒன்று பயிற்சி நிலையம் ஆரம்பிக்கும் செயற் குறிப்பு உண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : உள்ளது.

திரு. ந. சிவஞானம் : ஆடுதுறையில் உள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் நெல், வாழை போன்றவற்றிற்கு ஆராய்ச்சி செய்யப்படுவதைப் போல் கரும்புக்கும் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்த உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதற்கான ஆராய்ச்சி நிலையம் கடலூரில் இருக்கிறது. இது முழுக்க முழுக்க நெல்லுக்காகவே பயன்படுத்தப் படுகிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, ஆடுதுறை விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் இதுவரை எத்தனை புது ரக நெல் ஆராய்ச்சி செய்து வெளியிடப்பட்டிருக்கிறது ? சென்ற ஆண்டு ஏதாவது புது ரக நெல் வெளி யிடப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தனிக் கேள்வி போட வேண்டும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மேலமணக்குடி—கீழமணக்குடி இடையே இணைப்பு பாலம் அமைக்கும் திட்டம்.

* வினா எண் 347—திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டத்தில் மேலமணக்குடி-கீழமணக்குடி ஆகிய கிராமங் களுக்கு இடையே இணைப்பு பாலம் அமைக்க செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இனிவரும் ஆண்டுகளில் இப் பணியை மேற்கொள்ளப் பரிசீலனை செய்யப்படும்.

1982 மார்ச் 41

திரு. மி. வின்சென்ட் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் முதல் கோவளம் வரையில் கடற்கரையை இணைக்கும் முக்கியமான பாலமாக இது இருப்பதாலும், இண்டர்நேஷனல் டூரிஸ்ட் சென்டராக அறிவிக்கப்பட்டு இருக்கின்ற குமரி முனைக்கும் கோவளத்திற்கும் இடையே வருகின்ற முக்கிய மான பாலமாக இருப்பதாலும் குமரியைப் பெருமைப்படுத்தும் இந்தப் பாலத்தின் தேவையை உணர்ந்து அரசு அதற்கான ஆக்கப்பணிகளை துரிதப் படுத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இந்த முக்கிய மான பாலம் கீழமணக்குடியையும் மேலமணக்குடியையும் இணைக்கிற பாலம் ஆகும். அது மட்டுமல்லாது அந்த பாலம் அமைக்கப்பட்டால், குமரியிலிருந்து கோவளத்திற்கு நிரந்தரமான கடற்கரை சாலையை அமைப்பதாகவும் இருக்கும். இதற்காக 80 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. கிழக்கு கடற்கரைச் சாலையில் இதை ஒரு பகுதியாக எடுத்து கொள்ள வேண்டுமென்று நாம் மத்திய அரசுக்கு எடுத்துச் சொன்னோம். பணம் இல்லை, ஆகவே கிழக்கு கடற்கரைச் சாலையை எடுத்துக்கொள்ள இயலாத நிலையில் இருக்கிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆகவே உடனடியாகத் தேவையை முன்னிட்டு கிழக்கு கடற்கரைச் சாலையை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். ஆகவே வருகிற ஆண்டில் அந்தப் பாலத்தைக் கட்டி முடிப்பதற்கான வேலைகள் பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, கீழமணக்குடி கிராமத் திற்கும் மேலமணக்குடி கிராமத்திற்கும் உள்ள தூரம் ஒரு பர்லாங்தான். ஆனால் இந்தக் கிராமத்திலிருந்து அந்தக் கிராமத்திற்கு செல்ல வேண்டு மென்றால் 27 கிலோ மீட்டர் சுற்றிக்கொண்டு செல்கிறார்கள். எனவே, மேம் பாலம் போடாவிட்டாலும், ஒரு கிலோ மீட்டர் தள்ளி சில இலட்சம் ரூபாயில் அவசியம் கருதி அவசரமாக இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, கீழமணக்குடி கிராமத்திற்கும் மேலமணக்குடி கிராமத்திற்கும் இடையிலே உள்ள தூரம் ஏறத்தாழ 700 மீட்டர்தான். இந்த பாலத்தை அமைக்க வேண்டும் என்றால் 700 மீட்டருக்கு அமைக்க வேண்டும். அப்படி அமைப்பது என்றால் சில லட்சம் ரூபாய்களில் அது முடியாது. இப்பொழுது உள்ள விலைவாசிகளில் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் ஆனாலும் ஆகும். இப்படிப்பட்ட நிலையில் தேவையை முன்னிட்டு அடுத்த ஆண்டில் இதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதாக இருக்கிறோம்.